## அலங்காரச் செடிகளில் பயிர் பெருக்கம்

மலர் மற்றும் அலங்காரச் செடிகளைத் தேவையான எண்ணிக்கையில் உற்பத்தி செய்து தோட்டங்களில் நடவுக்காகவும், விற்பனைக்காகவும் பயன்படுத்தலாம். அலங்காரச் செடிகள் பயிர்பரப்புதல் பொதுவாக இரு முறைகளில் செய்யப்படுகின்றன.

01. பாலின இனப்பெருக்கம் (Sexual)

02. பாலிலா இனப்பபெருக்கம் (Asexual)

**பாலின இனப்பெருக்கம்**

ஓராண்டு(Annual) மலர்ச் செடிகள் விதைகளின் மூலம் உற்பத்தி செய்யப்பட்டுப் பயன்படுத்தப்படுகின்றன. விதைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் முறையைப் பாலின இனப்பெருக்கம் பயன்படுத்தப்படுகின்றன. விதைகளின் மூலம் உற்பத்தி செய்யப்படும் முறையைப் பாலின இனப்பெருக்கம் என்று கூறலாம். இம்முறையில் நன்கு முதிர்ந்த விதைகளைச் சேகரித்து அவற்கை நாற்றாங்கால் தயாரித்து விதைத்து, வளர்ந்த நாற்றுகளை நடுவதற்கு பயன்படுத்தலாம். இவ்வாறு பயன்படுத்தும்போது நமக்குத் தேவையான நிறத்துடன் கூடிய மலர்களை தன் மகரந்தச் சேர்க்கை மூலம் உற்பத்தி செய்து பயன்படுத்துவது அவசியம். அயல் மகரந்தச் சேர்க்கை மூலம் உண்டான விதைகள், தாய்ச் செடியின் குணநலன்களை பெற்றிருக்காது. இம்முறை எளிமையானது. அதிக எண்ணிக்கையில் கன்றுகள் உற்பத்தி செய்யலாம். பொதுவாக ஓராண்டு (Annual) மலப்பயிர்கள் இம்முறையில் பயிர்பெருக்கம் செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன. உதாரணம், ஜினியா, பாஸ்மாஸ், கோழிக் கொண்டை, பால்சம்.

**பாலிலா இனப்பெருக்கம்**

மலர் மற்றும் அலங்காரச் செடிகள் தாய்ச் செடியின் குணநலன்களுடன் பெற பாலிலா இனப்பெருக்கம் பின்பற்றப்படுகிறது. விதையைத் தவிர ஏனைய பகுதியைப் பயன்படுத்துதல் பாலிலா இனப்பெருக்கம் ஆகும். மலர் மற்றும் அலங்காரச் செடிகள் பொதுவாக கீழ்க்கண்ட முறைகளில் பயிர்ப்பெருக்கம் செய்து பயன்படுத்தப்படுகின்றன.

01. குச்சிகளின் மூலம் (Herbaceous)

02. பதியன் மூலம் (Soft wood)

03. மொட்டுக்கட்டுதல் மூலம் (Medium soft wood)

04. ஒட்டுக்கட்டுதல் மூலம் (Hard wood)

**குச்சிகளின் மூலம்**

செடிகளின் குச்சிகளையோ அல்லது இலைகளின் துண்டுகளைக் கொண்டோ பயிர்ப் பெருக்கம் செய்யலாம். குச்சிகளில் 4 வகையானவை பயன்படுத்தப்படுகின்றன.

01. இளம் நுனி தளிர்

02. மென் தண்டு

03. மத்திமத் தண்டு

04. கடினத் தண்டு

**இளம் நுனித் தளிர் குச்சிகள்**

பொன்னாங்கண்ணி, புதினா போன்றவை இளம் நுனித் தளிர்கள் மூலம் பயிர் பரப்பப்படுகின்றன. இம்முறையில் இளம் நுனித் தளிர்கள் கொய்யப்பட்டு நேரடியாகத் தயார் செய்யப்பட்ட தேர்ட்டங்களில் நடவு செய்யப்படுகின்றன. இவற்றை மாலை நேரங்களில் நடவு செய்து தொடர்ந்து நீர்ப் பாய்ச்சி வளரச் செய்து பயன்பெறலாம். இவ்வகையான செடிகள், தோட்டங்களில் பார்டர்கள் அமைக்க பயன்படுகின்றன.

**மென் தண்டு குச்சிகள்**

இவை பொதுவாக சற்று வயதான நுனிக்குச்சிகள் ஆகும். கோலியஸ், டுராண்டா மற்றும் கருநொச்சி போன்றவை மென் தண்டுக்குச்சிகளின் மூலம் பயிர்ப்பரப்பப்படுகின்றன. இக்குச்சிகள் சற்றேறக்குறைய 10 முதல் 15 செ.மீ நீளத்தில் சிறு துண்டுகளாக வெட்டப்பட்டு நடவுக்கு பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை மென் தண்டுகள் நல்ல சதைப் பற்றுடன் நன்கு வளையும் தன்மையுடன் காணப்படும். இவற்றை நேரடியாக நடலாம் அல்லது மேட்டுப் பாத்திகளில் நடவு செய்து, வேர் வந்தபின் எடுத்து பாலிதீன் பைகளில் மாற்றிப் பயன்படுத்தலாம்.

**மத்திமத் தண்டுக்குச்சிகள்**

இவ்வகையான குச்சிகள் மென் தண்டுக்கும் கடினத் தண்டுக்கும் இடைப்பட்ட நிலையில் காணப்படும். இவற்றை வளைக்கும்போது எளிதாக வளையாது. எனினும் கடினமாகவும் இருக்காது. இதில் காணப்படும் செல்லுலோசின் அளவு சற்று குறைவாக இருப்பதால் இவற்றின் குச்சியில் எளிதில் வேர் உண்டாக்கவல்லவை. குரோட்டன், அரேலியா, செம்பருத்தி போன்றவை மத்திமத் தண்டுக்குச்சிகளின் மூலம் பயிர் பரப்பப்படுகின்றன. இக்குச்சிகள் நாம் எழுதப் பயன்படுத்தும் காகிதப் பென்சில் தடிமனில் இருக்கவேண்டும். ஒவ்வொரு துண்டும் 15 முதல் 20 செ.மீ நீளம் இருக்கலாம். இவற்றின் அடிப்பகுதி சாய்வாகவும் மேல் பகுதி தட்டையாகவும் வெட்டப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு குச்சிகளைத் தயார் செய்யும்போது அவற்றில் குறைந்தது 3-4 முதிர்ந்த மொட்டுக்கள் இருக்கின்றனவா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்.

இக்குச்சிகளை நேரடியாக மண், மணல், குப்பை(சரிபங்கு) கலந்து நிரப்பப்பட்ட பாலித்தீன் பைகளிலோ அல்லது மேட்டுப்பாத்திகளிலோ நட்டு பின்னர் வேர் விட்ட பின்னர் தேவைக்கேற்ப பயன்படுத்தலாம். இவ்வகைக் குச்சிகளை பனிக்கூடங்களில் (Mist Chamber) வளர்ப்பதன் மூலம் அதிக எண்ணிக்கையில் குறுகிய காலத்தில் உற்பத்தி செய்து பயன்பெறலாம்.

**கடினத் தண்டுக் குச்சிகள்**

நன்கு முதிர்ந்து போன பருவக் கிளைக் குச்சிகள் (Past season wood) ஆகும். இவை கடினமானதாகக் காணப்படும். இக்குச்சிகளின் மேல் பகுதி பச்சையமின்றிக் காணப்படும். அலங்கார மாதுளை மற்றும் திராட்சை போன்றவை கடினத் தண்டுக் குச்சிகளின் மூலம் பயிர்ப் பரப்பப்படுகின்றன. மத்திமத் தண்டுக் குச்சிகள் பயிர்ப் பரப்புதலுக்கு தயாரிப்பது போல் இக்குச்சிகளையும் தயாரித்து நடவு செய்து வேர் வந்த பின்னர் தேவைக் கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம்.

குச்சிகளைப் பயன்படுத்தி பயிர்பரப்பும்போது அதன் வேர் வளர்ச்சியை ஊக்குவிக்க, வேர் வளர்ச்சி ஊக்கிகள் பயன்படுத்தலாம். வேர் வளர்ச்சியை ஊக்குவிக்க இன்டோல் பியூட்ரிக் அமிலம் பொதுவாகப் பயன்படுத்தப்பட்டு வரும் வேர் வளர்ச்சி ஊக்கி. இது வியாபார ரீதியில் செராடிக்ஷ், கிராடிக்ஷ், ரூட்டெக்ஸ் போன்ற பெயரில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. குச்சிகளை நீரில் நனைத்து இம்மருந்தில் நனைத்து நடுவதன் மூலம் வேர் உண்டாவதைத் துரிதப்பத்தலாம்.

இவை தவிர சிலவகை அலங்காரச் செடிகள் இலைத்துண்கள் மூலம் பயிர் பரப்பபடுகின்றன. பாம்புக் கற்றாழை, பிரையோபில்லம் போன்றவை இலைத்துண்டுகள் மூலம் பயிர்பரப்பபடுகின்றன.

சிலவகைச் செடிகள் வேர்கள் மூலம் பயிர்பரப்பப்படுகின்றன. விதையில்லா கறிப்பலா வேர்கள் மூலம் பயிர்பரப்பபப்படுகின்றன.

**மொட்டுக்கட்டுதல்**

மொட்டுக்கட்டுதலின் மூலம் பயிர்ப்பெருக்கம் செய்யும்போது தாய்ச் செடியின் குணாதிசயங்கள் மாறாமல் இருப்பதால் இம்முறை ரோஜா போன்ற மலர்ப்பயிர்களில் பின்பற்றப்படுகின்றன. இம்முறையில் எட்வர்டு அல்லது ஆந்திர ரோஜா வகைகள் வேர்ச் செடிகளாக வளர்க்கப்பட்டு அவை வேர் விட்ட பின்னர் அவற்றில் தேவையான இரகங்களின் மொட்டையெடுத்து பொருத்திப் பின்னர் எதிலிருந்து மொட்டுகள் எடுக்கபட்டனவோ அந்த தாய்ச் செடியின் குணநலன்களுடன் காணப்படும். மொட்டுக்கட்டுதலில் பலமுறைகள் இருந்தாலும் அதிகமாக இரு முறைகள் பின்பற்றப்படுகின்றன.

01. பட்டை வடிவ மொட்டுக்கட்டுதல் (Patch)

02. ஙகூங வடிவ மொட்டுக் கட்டுதல்

**பட்டை வடிவ மொட்டுக்கட்டுதல்**

இம்முறையில் பட்டை வடிவத்தில் மொட்டை வேர்ச் செடியிலிருந்து எடுத்து நீக்கி விட வேண்டும். அதன் பின்னர் அதே மாதிரியான மொட்டு தாய்ச் செடியிலிருந்து எடுத்து வேர் செடியில் பொருத்த வேண்டும். பொருத்தப்பட்ட பின்னர் அதனை பாலிதீன் தாள் கொண்டு கட்டிவிட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் தாய்ச் செடியிலிருந்து மொட்டு வளர்ந்து செடியாக உருவாகும். இவ்வாறு உருவாக்கப்பட்ட மொட்டுக்கட்டிய கன்றுகளை நட பயன்படுத்தலாம்.

**ஙகூங வடிவ மொட்டுக் கட்டுதல்**

கவசம் போல் மொட்டுகளை தாய்ச் செடியிலிருந்து எடுத்துக் கொண்டு ஙகூங வடிவில் வெட்டிய வேர் செடியின் பட்டையில் உள்ளே செல்லுமாறு பொறுத்திப் பின்னர் பாலிதீன் கொண்டு கட்டி விட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மொட்டுக்கள் பாதுகாப்பாக பராமரிக்கப்பட்டு எளிதில் துளிர்த்து செடியாக வளரும்.

01. விண் பதியம்

02. மண் பதியம்

**விண் பதியம்**

இம்முறையில் செடிகளில் மேல்பகுதியில் காணப்படும் பென்சில் அளவிலுள்ள தண்டுகளைத் தேர்வு செய்து அவற்றில் உள்ள பட்டையை ஒரு செ.மீ நீளத்திற்கு வெட்டி எடுத்துவிட வேண்டும். இதில் நன்கு வேகவைத்த, ஆறவைத்த தென்னை நார் கழிவு வைத்து பாலிதீன் பேப்பர் கொண்டு கட்டிவிட வேண்டும். காயம்பட்ட பகுதியிலிருந்து வேர்கள் தோன்றிய பின்னர் அவற்றைத் தாய் செடியிலிருந்து பிரித்து எடுத்துவிட வேண்டும். இதனை மண் சட்டிகளில் நட்டு பராமரித்து பின்னர் நடவுக்குப் பயன்படுத்தலாம். இவை செடிகளின் மேல் பகுதியில் செய்யப்படுவதால் விண் பதியம் என்று பெயர் பெற்றது.

**மண் பதியம்**

தரையோடு அல்லது மரைக்கு அருகில் காணப்படும் குச்சிகளை மண் பதியத்திற்குப் பயன்படுத்தலாம். பென்சில் அளவுள்ள குச்சிகளை தேர்வு செய்து நுனியிலிருந்து ஒரு அடி தள்ளி சிறு காயம் செய்து பின்னர் காயம் செய்த பகுதியை மண் நிரப்பப்பட்ட தொட்டியில் நன்கு உள்புகுமாறு செலுத்தி அதன் மேல் தேவைப்படும் அளவு மண்ணிட்டு நிரப்பி குச்சி மேலே வராமல் இருக்க சிறிய கல் ஒன்றை வைக்கவேண்டும். தொட்டிக்குத் தொடர்ந்து நீர் ஊற்றி வர குச்சிகள் வேர்விடத் துவங்கும். இரண்டு மாத காலத்தில் வேர் வளர்ந்த பின்னர் தாய்ச் செடியிலிருந்து பிரித்துப் பின்னர் நடவுக்குப் பயன்படுத்தலாம்.

**ஒட்டுக்கட்டுதல்**

பொதுவாக இம்முறை அலங்காரச் செடிகளில் பின்பற்றுவது இல்லை. ஒட்டுக்கட்டுதலின் போது, தாய்ச் செடியிலும், வேர்ச் செடியிலும் ஒரே மாதிரியான காயங்கள் ஏற்படுத்தி இணைத்துப் பின்னர் துணியினால் அல்லது பாலிதீன் பேப்பர் மூலம் கட்டி விடுவர். இம்முளறை பழங்கள் பயிர்பரப்ப அதிகம் பின்பற்றப்படுகிறது.

**திசு வளர்ப்பு**

தாவரங்களின் செல் அல்லது திசுக்களைக் கொண்டு பயிர்பரப்புதல் தற்போது பிரபலமான முறையாகக் கருதப்படுகிறது. தாவரத்தின் செல், திசுக்களை எடுத்து அதை வளர ஏதுவான சூழ்நிலையை ஏற்படுத்தி செடியான பின்னர் பயன்படுத்துவது திசு வளர்ப்பு என கருதப்படுகிறது. இம்முறையில் ஆர்கிட், ஆந்தூரியம் போன்ற விலையுயர்ந்த அழகிய மலர்கள் பயிர்பரப்பப்பட்டு பயிரிடப்படுகின்றன. இம்முறையில் குறைந்த இடத்தில் அதிக எண்ணிக்கையில் குறுகிய காலத்தில் பல லட்சக்கணக்கில் கன்றுகளை உற்பத்தி செய்து பயன்பெறலாம்.